## அரசுத் தேர்வுகள் இயக்ககம்– சென்னை–6.



### மேல்நிலைப் பொதுத் தேர்வு இரண்டாமாண்டு மார்ச் 2019
### பகுதி–I தமிழ் –விடைக்குறிப்புகள்

**விடைத்தாள் மதிப்பிடும் போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றல் வேண்டும்.**

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து, தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை. ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இல்லாதிருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து **அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.**
4. தவறான விடைகளை (X) குறியிட்டும், தொடர் பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப் பிழைகளை (^) குறியிட்டுக் காட்டியும், விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (√) குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடையிருப்பின் "மிகை " என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் "மீண்டும்" என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண்கள் வழங்குதல் கூடாது.

மதிப்பெண்கள் : 90

| வ. எண் | விடை | மதிப் பெண் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|
| I. | பலவுள் தெரிக (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக) | | 6 x 1=6 |
| 1. | ஈ) சுவாமிமலை | 1 | |
| 2. | ஆ) இறையனார் | 1 | |
| 3. | அ) இத்தாலி | 1 | |
| 4. | ஆ) அப்துல் ரகுமான் | 1 | |
| 5. | அ) பாண்டியநாடு | 1 | |
| 6. | இ) உழுநிலம் | 1 | |

| | | | |
|---|---|---|---|
| II. | அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. | 1 | |
| 7. | ஆ) பண்புத்தொகை | 1 | |
| 8. | ஆ) இராஜம் கிருஷ்ணன் | 1 | |
| 9. | அ) கொத்துப்பூ | 1 | |
| 10. | அ) வாழ்த்து | 1 | |
| 11. | இ) சட்டை – வல்லிக்கண்ணன் | 1 | |
| 12. | இ) அடுக்குத்தொடர் | 1 | |
| 13. | ஈ) நேர்மையே சிறந்த கொள்கை | 1 | |
| 14. | இ) பார், காடு | | 3 x 2=6 |
| III.அ. | எவையேனும் மூன்றனுக்கு விடைதருக. | 2 | |
| 15. | <u>இறைச்சிப்பொருள்</u><br>தலைவனும் தலைவியும் மீண்டுவரின் நான் அவர்களுக்கு என் இல்லத்தின்கண் திருமணவிழா எடுத்து என் அன்பிற்குரிய சுற்றத்தாருடன் மகிழ்ந்திருப்பேன் என்று நற்றாய் கூறுவதாக இறைச்சிப் பொருள் தோன்றிற்று. | 2 | |
| 16. | நிலவுலகத்தைவிட மிகப்பெரியது<br>ஆபத்து காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது இவ்வுலகத்தை விட மிகப் பெரியது | 2 | |
| 17. | சுந்தரகாண்டம் – பெயர்க் காரணம் :<br>அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயர் உண்டு.<br>அனுமனின் அருஞ்செயல்கள் கூறப்பெறுவதால்<br>இக்காண்டத்திற்குச் சுந்தரகாண்டம் என்ற பெயர் ஏற்பட்டது. | 2 | |
| 18. | அந்தாதி :<br>அந்தம் + ஆதி<br>ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கு அடுத்து வரும் பாடலின் முதலாய் வரும்படி அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும். | 2 | |
| ஆ. | எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. | | 2 x 2=4 |
| 19. | பழந்தமிழ் மக்களின் கொள்கை :<br>இனிமையாகப் பேசுதல் , நடுவுநிலைமையாக இருத்தல், பிறருக்கு உதவி செய்தல், நன்றி மறவாது இருத்தல்.<br>தொழில் செய்தே பொருள் தேடும் கொள்கை<br>தன் முயற்சியினால் வருகின்ற பொருளையே செலவு செய்வதற்கு உரியவன் என்னும் கொள்கை. | 1<br>1 | |
| 20. | 'உய்த்து' என்னும் சொல்லின் பொருள் :<br>இரகசியத்தைக் கொண்டு போய்ப் பிறர்க்குச் சேர்த்தல் | 2 | |
| 21. | குடைவரை கோவில்கள் அமைக்கப்பட்ட காலம் :<br>கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை<br>அமைத்த மன்னர்கள் : பல்லவர்கள், பாண்டியர்கள், அதியர், முத்தரையர். | 1<br>1 | |
| IV. | எவையேனும் ஏழனுக்கு விடைதருக. | | 7 x 2=14 |
| 22. | அ) குபு குபு வென்று புகை மண்டிலம் சூழ்ந்தது.<br>ஆ) வாழ்க தமிழ் என்று அவனா சொன்னான்? அறிந்து சொல் எனக்கு. | 1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 23 | அ) விழாவில் அறிஞர் பலர் பேசினர்.<br>ஆ) இடப்பக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று. | 1<br>1 | 2 |
| 24. | (அ) கோழி முட்டை தாழ்வாரத்தில் உருண்டது.<br>(ஆ) கொடுத்த செய்தியைக் கோவையாய்ப் பேசு. | 1<br>1 | 2 |
| 25. | அ) டிசைன் – வடிவமைப்பு<br>ஆ) லோன் – கடன்<br>இ) ஜில்லா – மாவட்டம்<br>ஈ) உபந்நியாசம் – ஆன்மீகச் சொற்பொழிவு | 1/2<br>1/2<br>1/2<br>1/2 | 2 |
| 26. | அ) பலாத் தோப்பில் பலா மூசு பறித்து வந்தேன்<br>ஆ) யானைப் பாகனோடு ஆட்டு இடையனும் வந்தான் | 1<br>1 | 2 |
| 27. | " அப்பா ! ஏழாம் திருநாளுக்கு நானும் உன் கூட வரவா ?" என்று மாணிக்கம் கேட்டான். | 2 | 2 |
| 28. | **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக**<br>அ. வெஞ்சினம் = வெம்மை + சினம்<br>ஈறுபோதல்<br>முன்னின்ற மெய் திரிதல்<br>ஆ. மண்ணரசு = மண் + அரசு<br>தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்<br>உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே<br>**(பிரித்து மட்டும் எழுதியிருப்பின் ஒரு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br><br><br>1<br>1 | 2<br><br><br><br>2 |
| 29. | **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**<br>அ. போற்றி – போற்று + இ<br>போற்று – பகுதி<br>இ – வினையெச்ச விகுதி<br>ஆ. சுழன்று – சுழல் (ன்) + ற் + உ<br>சுழல் – பகுதி<br>ல் (ன்) ஆனது விகாரம்<br>ற் – இறந்த கால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி<br>**(பிரித்து மட்டும் எழுதியிருப்பின் ஒரு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1<br><br>1<br>1 | 2<br><br><br>2 |
| 30. | **வல்லினம் மிகும் இடங்களுக்குரிய விதிகள்**<br>• ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வலி மிகும்.<br>• அந்த, இந்த என்னும் சுட்டுத்திரிபு அடுத்தும் எந்த என்னும் வினாத்திரிபு அடுத்தும் வலி மிகும்.<br>• செயவென் எச்சத்தின் பின் வலி மிகும்.<br>• வன்தொடர்க் குற்றியலுகர ஈற்றுச்செய்தென் எச்சத்தின் பின் வலி மிகும்.<br>• இகர ஈற்றுச் செய்தென் எச்சத்தின் பின்னும் வலி மிகும்.<br>**(இவற்றுள் ஏதேனும் இருவிதிகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | | 2 |

| | | | |
|---|---|---|---|
| | | | 2 x 4=8 |
| V. | சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) | | 4 |
| 31. | பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன:<br>• கதிரை நாட்டுரிமையைக் குறிக்கும் பட்டயம்<br>• வீரவாள்<br>• அணிகலன்கள்<br>• மணிமுடி<br>• பகைவரை அழித்திடும் குறிப்பு | | |
| 32. | இடம் சுட்டிப் பொருள் விளக்கம் :<br>இடம் : நரிவெரூஉத்தலையார் பாடிய புறநானூற்றுப் பாடல்.<br>பொருள் : நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்வதைக் கைவிடுங்கள்.<br>விளக்கம் : பயனில்லாத முதுமையுடையவரே! பிறர்க்கு நன்மை செய்யாவிட்டாலும், தீமை செய்வதைக் கைவிடுங்கள், இதுதான் எல்லோரும் விரும்புவதும், மறுமையில் நற்கதிக்கு உய்ப்பதுமாகும். | 1<br>1<br><br>2 | 4 |
| 33. | காடு உருவகப்படுத்தப்பட்டமை:<br>1. முட்புதர்கள் நெருஞ்சிமுள், கள்ளி – கோட்டையின் மதில்சுவர்.<br>2. ஒற்றையடிப்பாதை – கோட்டையின் நுழைவாயில்.<br>3. ஓங்கி வளர்ந்த நெடுமரங்கள் – கோட்டையின் தூண்கள்.<br>4. மரங்களில் பூத்த பூக்கள் – கோட்டையின் மதில் கொடிகள். | 1<br>1<br>1<br>1 | 4 |
| | | | 2 x 4=8 |
| ஆ. | சிறுவினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) | 2 | 4 |
| 34. | முற்காலத்து விளங்கிய இசைத்தமிழ் நூல்கள் :<br>• பெருநாரை<br>• பெருங்குருகு<br>• இசைநுணுக்கம்<br>• தாளவகையோத்து<br>இக்காலத்து விளங்கும் இசைத்தமிழ் நூல்கள் :<br>• கந்தபுராணக் கீர்த்தனை<br>• பெரியபுராணக் கீர்த்தனை<br>• சங்கீத சந்திரிகை | 2 | |
| 35. | 'ஆ'வின் வாயிலாக மனிதன் பெரும் பயன்கள் :<br>• இருவகை வேளாண்மைக்கும் உழுது இறைத்து உதவியது.<br>• மாட்டின் ஊனும் பாலும் மட்டுமல்லாமல் அதன் தோல், கொம்பு, உரசனை (ரோசனை) வால்மயிர், சாணம் முதலிய பிறவும் பயன்பட்டன.<br>• உணவை விளைவிப்பதும் தானும் உணவாவதும் வேறு பல்லாற்றானும் உதவுவது மாடு<br>• பால் முதல் நெய்யீறாகவுள்ள ஐயமுதம். | 1<br>1<br>1<br>1 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 36. | **முதன்முதலில் கட்சி அமைப்பு உருவாக்கம் :**<br>❖ செல்வாக்கு, பரம்பரையாய் இருக்கக் கூடாது. புதியவர்கள் தம் திறமையாலும், உழைப்பாலும் செல்வாக்கு பெற்றனர்.<br>❖ தேர்தல் காலத்தில் ஆள் திரட்டிக் கூட்டத்தைச் சேரத்தனர்.<br>❖ ஒரு சிலர் கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெறுவதைக் கண்டதும், வேறுசிலர் சேர்ந்து மற்றொரு கட்சி அமைத்துச் செல்வாக்குப் பெற முயன்றனர். கட்சிகள் கட்சிகளோடு மோதின.<br>❖ மக்களின் நல்வாழ்வுக்காகக் கட்சிகள் தோன்றின. ஆனால் அக்கட்சிகளின் வாழ்வுக்காகவே மக்கள் கருவியாகப் பயன்பட வேண்டியதாயிற்று. | 1<br>1<br>1<br>1 | 4 |
| VI | **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** | | 3 x 4= 12 |
| 37. | **திரிபணி**<br>**இலக்கணம்:** ஒரு செய்யுளின் அடிதோறும் முதல் எழுத்து வேறுபட்டிருக்க, பிற எழுத்துகள் ஒரே வகையாக அமைந்து பொருள் வேறுபடுவது திரிபணி.<br>**சான்று :**<br>"திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன ; சிற்றன்னையால்<br>தருவேங் கடத்துத் தரைமே னடந்தன ; தாழ்பிறப்பின்<br>உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன ; வுற்றழைக்க<br>வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால் கழலே".<br>**விளக்கம் :**<br>திருவேங்கடம் – திருப்பதி மலை<br>தருவேங்கடம் – மரங்கள் வேகின்ற காடு<br>உருவேங்கடம் – உருவத்தை உடைய எங்கள் துன்பம்<br>வருவேங்கடம் – யானை அழைக்க வருவோம்<br>**(திருவேங்கடத்தந்தாதியிலுள்ள பிற பாடலும் சான்றாகத் தரலாம்)**<br>அணி விளக்கம் – 2 மதிப்பெண்<br>சான்று – 1 மதிப்ெண்<br>பொருத்தம் – 1 மதிப்பெண்<br><br>**(அல்லது)**<br><br>**உவமையணி :**<br>**அணி விளக்கம் :** ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாய் அமைந்திருக்குமாயின் அஃது உவமையணி ஆகும்.<br>**சான்று :** "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை"<br>**சான்று விளக்கம் :** தன் மீது நின்று கொண்டு தன்னைத் தோண்டுபவரை விழாமல் தாங்கிக் கொள்ளும் நிலம் போலத் தம்மை இகழ்பவரையும் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்.<br>**சான்று பொருத்தம் :**<br>உவமை : அகழ்வாரைத் தாங்கும் நிலம்<br>உவமேயம் : இகழ்வார்ப் பொறுத்தல்<br>உவமஉருபு : போல | 2<br>1<br>1<br><br>2<br>1<br>1 | 4<br><br><br><br>4 |

| | | | |
|---|---|---|---|
| 38. | தமிழாக்கம் :<br>அ. அறிவே ஆற்றல்.<br>ஆ. வருமுன் காத்தலே சிறந்தது / வெள்ளம் வருமுன் அணை போடு.<br>இ. சிறுதுளி பெருவெள்ளம்.<br>ஈ. உன்னுடைய வெற்றிக்கு வாழ்த்துகள்.<br>**காதுகேளாத மாணவர்களுக்கான மாற்றுவினா :**<br>அ. எழுத்துக் கூட்டி எழுதும் பயிற்சி.<br>ஆ. ஐந்து, கெட்டில்.<br>இ. பார்த்து எழுதும் பழக்கம்.<br>ஈ. நேர்மை | 1<br>1<br>1<br>1<br><br>1<br>1<br>1<br>1 | 4<br><br><br><br><br>4 |
| 39. | பாநயம் பாராட்டல் :<br>• மையக்கருத்து<br>• ஏற்புடைய நயங்கள் (மூன்று இருப்பின் முழு மதிப்பெண்) | 1<br>3 | 4 |
| 40. | பழமொழி விளக்கம்<br>ஏற்ற வாழ்க்கை நிகழ்வினைக் கதை வடிவில் எழுதுதல் | 2<br>2 | 4 |
| VII | **நெடுவினா (இரு பக்கங்களுக்கு மிகாமல்)** | | 2 x 6= 12 |
| 41. | **கண்ணகியின் சூளுரை**<br>❖ கற்புடைப் பெண்கள் முன் காதல் கணவனைக் காண்பேன்.<br>❖ அவன் வாயால் குற்றமற்ற இனிய மொழிகளைக் கேட்பேன்.<br>**கோவலனைக் கண்டபோது நிகழ்ந்த அற்புதம்**<br>❖ எழுந்து நின்ற கோவலன், 'நிலவு போன்ற உன் முகம் ஏன் வாடியது' எனக் கேட்டல்.<br>❖ கண்ணகி அவனை ஆரத் தழுவுதல்.<br>❖ அவள் கண்ணீரைக் கையால் துடைத்தல்.<br>❖ அவனைத் தொழுது நிலத்தில் வீழ்தல்.<br>❖ பழுது நீங்கி கோவலன் அமரர் கூட்டத்திற்குச் செல்லுதல்<br>**(அல்லது)**<br>**தன்னம்பிக்கையற்றுக் காணப்படும் இளைஞனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகள்**<br>❖ மூலையில் கிடக்கும் வாலிபனே, தினமும் முதுகிலா வேலையைத் தேடுகிறாய்.<br>❖ வாழ்க்கை பாலைவனம் என்று ஏன் பல்லவி பாடுகிறாய் ?<br>❖ வெறுங்கை என்பது மூடத்தனம்<br>❖ உன் விரல்கள் பத்தும் அல்லவா மூலதனம் ?<br>❖ உன் கட்டைவிரலை விட இமயம் குட்டை என்பதை எடுத்துக் கூறு<br>❖ உன் தோள்கள் இரண்டும் தொழிற்சாலை, நீ தொட்டால் அந்த இடம் மலர்ச்சோலை.<br>❖ உன் கால்நகம் கீறிய கோடுகள் வழியே கங்கையும் சிந்துவும் ஓடிவரும்.<br>❖ வடக்கு, தெற்கு என்னும் இரு துருவங்களையும் உன் தோள்கள் இணைக்கட்டும்.<br>❖ மானிடனே, நீ மண்புழு இல்லை. உன் வலிமையை வான் அளவுக்குக் காட்டு. | 2<br><br><br><br>4<br><br><br><br><br><br><br><br>6 | 6 |

| | | | |
|---|---|---|---|
| 42. | சமரசக் கோயிலை அமைத்தவர் :<br>இராமலிங்க அடிகளார்<br><br>சமரச உணர்விற்கு அவர் கூறும் கருத்துகள்:<br>1. சமரச ஞானத்தை அறிவுறுத்தி, சமரசக் கோயிலை வடலூரில் நிறுவினார்.<br>2. எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொள்ளும் அருட்பெருஞ்சோதி.<br>3. சமரசம் என்பது நாடு, மொழி, சமயநெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாது இவற்றை எல்லாம் கடந்து நிற்பதே சமரச ஞானமாகும்.<br>4. நீதியும் மெய்ப்பொருளும், அழிவில்லா வாழ்க்கையும் சுகமும் நடுவும் இறுதியும் அருட்பெருஞ்சோதி என அறிந்தார்.<br>5. சமயங்களும் மதங்களும் மார்க்கங்களும் அவற்றின் ஆசாரக் கொள்கைகளும், வேறுபாடுகளும் சுத்த சன்மார்க்கத்திற்குத் தடைகளாகக் கருதினார்.<br>6. ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை தம்மை விட்டு விலகாது நிறைந்து விளங்கச் செய்ய வேண்டுமென்று வேண்டினார். | 1<br><br>5 | 6 |
| | (அல்லது)<br><br>ஓவியக்கலை தமிழகத்தில் சிறந்திருந்தது<br>❖ உலகில் காணும் உயிருள்ள, உயிரில்லா எல்லாப் பொருள்களையும் அவ்வவற்றின் உருவங்கள் போலத் தோன்றுமாறு தமிழ்நாட்டு ஓவியர்கள் ஓவியங்களைத் தீட்டினர்.<br>❖ ஓவியத்தை ஒரு யோகக் கருவியாகவே பார்த்தனர்.<br>❖ கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் ஓவியங்கள் காணப்படுகின்றன.<br>❖ பல்லவர் காலத்தவையே தொன்மையானஓவியங்கள்.<br>❖ ஓவியத் துறையில் பல்லவர்கள் பெரும்பணி ஆற்றியுள்ளனர்.<br>❖ பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் தானே சிறந்த ஓவியனாக விளங்கினான்.<br>❖ இவ்வோவியங்களைக் கோயில் நுழைவாயிலின் இரு பக்கங்களிலும், கருப்பக்கிரகச் சுவர்களிலும், பிரகாரங்களிலும், விதானத்திலும் தீட்டினர்.<br>❖ மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபம், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில், தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள் சிறப்பு மிக்கவை.<br>❖ பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் ஆடல்மகளின் ஓவியம் வண்ணச் செறிவும், உணர்ச்சிப் பொலிவும் கூடியது. | | 6 |

| | | | |
|---|---|---|---|
| 43. | **ஒரு பக்க அளவில் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுதல் வேண்டும்:**<br>**பால்வண்ணம் பிள்ளை**<br>கதையாசிரியர் பெயர்<br>முன்னுரை, முடிவுரை<br>ஆசிரியர் : புதுமைப்பித்தன்<br>பால்வண்ணம் பிள்ளையின் பிடிவாத குணம் – குடும்பச் சூழல் – மெக்ஸிகோ நகரம் – மனைவியின் ஆலோசனை –பிள்ளை அவர்களின் பிடிவாதம் – மாட்டை விற்றல் | 2<br><br>4 | 1 x 6= 6<br><br>6 |
| | (அல்லது) | | |
| | **ஒவ்வொரு கல்லாய் (கதைமாந்தர் திறனாய்வு)**<br>முன்னுரை, முடிவுரை, மனம் கவர்ந்த கதை மாந்தர்<br>கதைச் சுருக்கம்<br>கதை மாந்தர் பண்புகள் – உட்தலைப்பிட்டு விளக்குதல்<br><br>**(கதையை மட்டும் எழுதியிருந்தால் மூன்று மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>2<br>3 | 6 |
| VIII | **அடிமாறாமல் எழுதுக.** | | **4 + 2 = 6** |
| 44. | **அ. சிக்கனம்**<br>உரைநடையின் சிக்கனந்தான் கவிதை ; ஓங்கும்<br>உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம் ; காதல்<br>வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம் ;<br>மாளிகையின் சிக்கனந்தான் குடிசை யாகும் ;<br>உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம் ;<br>உணவுகளின் சிக்கனந்தான் பங்கீ டாகும் ;<br>அரசியலின் சிக்கனந்தான் இரண்டே கட்சி ;<br>அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூல்கள். | 4 | |
| ஆ. | உதவி வரைத்தன் றுதவி உதவி<br>செயப்பட்டார் சால்பின் **வரைத்து.** | 2 | |